திரு. கே. என். குமாரசாமி : ஒரு முட்டையிடுவதற்குக்கூட வழியின்றி மூடிவிட்டார்களே என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோழிப் பண்ணைகளை மூடிவிட்டார்கள் என்ற தவறான செய்தி பரப்படுகிறது. முன்பு கோழிப் பண்ணை என்று போர்டு இருக்கும். உள்ளே கோழியிருக்காது, முட்டையிருக்காது அதுபோன்ற இடங்களைத்தான் மூடினோம். இன்னும் தொடர்ந்து நட்டத்தில் இருந்துகொண்டிருந்த இடங்களை மூடி அங்கேயிருந்த குஞ்சுகளை வேறு இடங்களுக்கு அனுப்பியிருக்கிறோம்.

திரு. கே. ஆர். கோவிந்தன்: நம்முடைய கோழி முட்டைகளுக்கு வெளி நாடுகளில் கிராக்கி இருக்கிறதா? ஆம் எனில் அனுப்பப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏதேனும் அனுப்ப முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : கோழிப் பண்ணை நடத்துவதில் அதிகமாகச் செலவு ஆகிறது. நம்முடைய உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கிற சம்பளத்தை எல்லாம் கணக்கிட்டுச் சராசரி பார்த்தால் ஒரு முட்டை 1¼ ரூபாய் ஆகிறது என்று முன்பு மாவட்ட கலெக்டர் அறிக்கை கொடுத்தார்களே, அதன் காரணமாகத்தான்—எக்கனுமிகலாக இல்லை என்று இந்த பவுல்ட்ரி பார்ம்கள் மூடப்பட்டுவிட்டனவா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோழிப்பண்ணை லாபகரமாக இருக்க அதிகமாக கோழிகள் இருந்தால்தான் முடியும். டாக்டர்களை எல்லாம் போட்டுச் சம்பளம் கொடுக்கிறபொழுது அப்போதுதான் பொருளாதாரத் துறையில் நட்டமில்லாதிருக்கும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் பெரிய அளவில் கோழிப்பண்ணைகள் ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

Construction of Advocates' Chamber

* 298 *Q.*—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any proposal for the construction of Advocates' Chamber sent by the High Court, Madras is pending construction in 1969 before the Public Works Department of Government of Tamil Nadu; and

(*b*) if so the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு பரிசீலனையிலுள்ளது.

திரு. டி. மார்டின் : பொதுவாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு அறிஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இருந்து தொழில் செய்ய சேம்பர் வசதி இல்லாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அடிஷனல் சேம்பர் கட்டவேண்டுமென்று பலகாலமாக யோசனை இருந்து வருகிறதே, உடனடியாகக் கட்ட முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பலகாலமாக இருப்பது எனக்குத் தெரியாது. மே 1970 இல் தான் உயர்நீதி மன்றத்தில் இருந்து ஒன்பது லட்சத்து ஐம்பத்தாராயிரம் மதிப்பில் அடிஷனல் சேம்பர்ஸ் கட்ட ப்ரபோஸ் வந்திருக்கிறது. அது பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜுடிஷியல் டிமாண்ட்மீது அடிக்கடி பேசுவதற்கு நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடு கிற காரணத்தாலே பொதுவாக ஹைகோர்டிலே வழக்காட வருகின்றவர்கள் இருப்பதற்கு வசதியில்லாமல் பெஞ்சுகள் முதலிய வசதிகள் இல்லாமல் இருக்கிற காரணத்தினுல் அவர்கள் பே மாஸ்டர், அதாவது வழக்குக்கு கோர்ட் பீஸ் கட்டுகிறுர்களே என்பதை மனதிலே வைத்து, வருகின்றவர்கள் இருப்பதற்கு பெஞ்சுகள், நாற்காலிகள் போட்டு, தங்களுடைய வழக்கு நடப்பதைப் பார்ப்பதற்கு வருகின்றவர்களுக்குக் குறைந்த பட்சம் அப்படிப் பட்ட வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு இந்த அரசு ஹைகோர்ட்டுக்குப் பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றத்திலே தங்களுடைய வழக்குகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது அமர்ந்து பார்ப்பதற்கு அருமையான நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. நானேகூடப் பார்த்தி ருக்கிறேன். ஆகவே, பொதுமக்களுக்கு என்ன தேவை என்று உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்கிறதோ அதையெல்லாம் நாம் முடிந்த அளவுக்குச் செய்து தருகிறோம்.

Sub-Magistrate's Courts at Vannarpet

*** 299 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is a proposal to shift the Sub-Magistrate's Courts at Vannarpet to Kokarakulam in Tirunelveli district?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே வண்ணாரப்பேட்டையி லுள்ள நீதிமன்றத்தை கொக்காகுளத்திலே உள்ள கலெக்டர் ஆபீசுக்குக் கொண்டுவரவேண்டுமென்று அங்கேயுள்ள வழக்கறிஞர் சங்கம் ஏகோபித்து முடிவுசெய்து அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா? ஆமெனில் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்கறிஞர் சங்கம் முடிவு செய்ததைப் பற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனல் அந்த நீதிமன்றம் கலெக்டர் ஆபீசுக்கு மாற்றப்படவேண்டுமென்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் சிபாரிசின்பேரிலே இதுகுறித்துத் தகுந்த முடிவு எடுக்கப் படும்.

ஹாஜி ம. மூ. பீர்முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல் வேலியில் கொக்காகுளத்திலே வழக்குமன்றம் இருக்கிற இடம் அவ்வளவு வசதியாக இல்லாமல் இருக்கிற காரணத்தினுலும் வண்ணாரப்பேட்டையிலுள்ள வழக்குமன்றத்தை பாளையங்கோட்டை ஹை கிரவுண்டிற்கு மாற்றுவதற்கு— மதுரையில் இருப்பதைப் போன்று செய்வதற்கு—அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? இல்லையென்றால் அரசு அதைக்குறித்துப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிற நீதிமன்றங்களுக்குச் சரியான கட்டடங்கள் இல்லை என்பதை நானே சென்று பார்த்தேன். அங்கேயுள்ள நீதிபதிகள் அழைத்துச் சென்று காண்